மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

ஆகஸ்ட் 2009

CONSORTIUM OF HUMANITARIAN AGENCIES (GTE) LIMITED

# சூழ்நிலையின் துரித மதிப்பிடல்

(Rapid Context Assessment )

### தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு


| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | 2 |
| ஆட்சிமுறைமை | 2 |
| பாதுகாப்பு | 3 |
| மனித உரிமைகள் | 3 |
| பொருளாதார சூழ்நிலை | 4 |
| சுற்றுச் சூழல் | 5 |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | 6 |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | 6 |


### மாவட்ட பகுப்பாய்வுகள்


| | |
|---|---|
| அம்பாறை | 7 |
| மட்டக்களப்பு | 7 |
| கொழும்பு | 7 |
| யாழ்ப்பாணம் | 8 |
| மன்னார் | 8 |
| திருகோணமலை | 9 |
| வவுனியா | 9 |


### தற்காலப் போக்குகளின் பகுப்பாய்வுச் சட்டகம்

| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | ↗ |
| ஆட்சிமுறைமை | ↘ |
| பாதுகாப்பு | → |
| மனித உரிமைகள் | ↘ |
| பொருளாதார சூழ்நிலை | ↗ |
| சுற்றுச் சூழல் | ↘ |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | ↗ |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | ↘ |

## முக்கிய சாராம்சம்



எல்.ரி.ரி.ஈயினரின் வீழ்ச்சியுடன் தொடரும் அரசியல் வெற்றிகளை அரசாங்கம் தொடர்ந்து மகிழ்ச்சியாக அனுபவித்து வருகின்றது. கடந்த சில மாதங்களில் ஆளுங் கட்சி நடைபெற்ற 7 மாகாண சபைத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளது. ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள தென் மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளது. எதிர்க்கட்சிகள் பலமான கூட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு கடும் முயற்சி செய்து வருகின்றன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மீண்டும் ஒரு முறை பொதுமக்கள் மத்தியில் பிரதான விவாதப் பொருளாக மாறியுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கப்படுவது தொடர்பான மாற்றம் இருந்தால் மாத்திரமே அரசியல-மைப்பு மாற்றங்களுக்கு ஆதரவு வழங்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது. சிறுபான்மை கட்சிகள் உட்பட மற்றும் சில கட்சிகள் எதுவிதமான கருத்தையும் வெளியிடமால் இருக்கின்றன.

நாட்டின் மனித உரிமைகள் நிலை-மைகள் தொடர்பில் ஆகஸ்ட் மாதத்தில் பாரிய மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த காலப்பகுதியில் 24 கொலைச்சம்பவங்களும், 26 கைதுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தண்டனை பயமற்ற கலாசாரம், சட்டநடைமுறையின்மை, பொலிஸாரின் தன்னிச்சையான நடவடிக்கை இந்த மாதத்திலும் தொடர்ந்தது. பாதாளவுலக குழுவைச் சேர்ந்த சிரேஸ்ட தலைவர்களை அழிக்கும் பொலிஸாரின் நடவடிக்கைக்கு அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளின் ஆதரவும் வழங்கப்பட்டது. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சம்பவங்களாக இந்த மாதத்தில் இரண்டு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றன. சிங்கள இளைஞர் ஒருவர் இந்த நடவடிக்கையில் உயிரிழந்த சம்பவம் மற்றும் சிங்கள மாணவர் ஒருவர் பொலிஸாரின் ஆதரவு குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளால் தாக்கப்பட்டமை என்பனவே அந்த சம்பவங்கள். இரண்டு சம்பவங்களிற்கும் பொதுமக்களினால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் கவனிக்காமல் இருந்தமையே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் காரணம் எனத் தெரிவித்த பொதுமக்கள் சட்டமானது தனிநபர்களுக்காக இல்லாது அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக இருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர்.

வவுனியாவில், இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தொடர்ந்தும் அங்கேயே உள்ளனர். தொடர்ச்சியான மழைக் காலநிலை காரணமாக அவர்களது வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அதுதவிர, முகாம்களில் வாழ்பவர்களில் சிலர் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்படுவதாகவும் சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன, எனினும், இது குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இல்லை.

பொலிஸாரின் தாக்குதலில் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக அரச சார்பற்ற ஊடகம் ஒன்றில் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் நடைமுறை தொடர்பில் கருத்துக்கள் வெளிவரத் தொடங்கின. முக்கியமாக, 17ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் நடைமுறை தொடர்பான விடயங்கள் பொதுமக்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன. எனினும், இலங்கையில் ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கு கடப்பாடு உடைய சிவில் சமூகங்களின் பங்களிப்பு திருப்திகரமானதாக இல்லை.

யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றமையே இந்த மாதத்திற்கான மிகவும் முக்கியமான சாதகமான அபிவிருத்தியாக மனித உரிமைகள், ஆட்சிமுறைமை மற்றும் சுற்றாடல் விவகாரங்களில் காணப்படுகின்றது. வாக்காளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்த போதிலும், தேர்தல் நீதியானதாகவும், நியாயமானதாகவும் நடைபெற்றது. இரண்டு தேர்தல்களிலும் எதிர்க்கட்சியும் போதிய வாக்குகளைப் பெற்றிருந்தது.

எல்.ரி.ரி.ஈயின் தலைவராக தன்னை அறிவித்துக் கொண்ட கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டமை ராஜபக்ஸவின் நிர்வாகத்தில் பாரிய வெற்றியாகும். அரசாங்கம் பயங்கரவாதிகளிடம் இருந்து கைப்பற்றிய இடங்களில் தொடர்ந்து பாதுகாப்பை பலப்படுத்தி வருகின்றது. பயங்கரவாதிகளின் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்காகவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு செலவீனத்தை அதிகரிப்பதாகவும், மேலும் வீரர்களை இணைத்துக் கொள்வதாகவும், எல்.ரி.ரி.ஈ அதிகாரத்தின் கீழ் இருந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைக்கவுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆகஸ்ட் மாதத்தில் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றம் காணப்பட்டது. பணவீக்கமும் சராசரியாகவே இருந்தது. மத்திய வங்கியும், வெளிநாட்டு சேமிப்புக்களை கட்டியெழுப்புவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. அமெரிக்காவின் முதலீட்டு வங்கியில் 875 மில்லியன் டொலர்கள் அதற்கு பெரும் உதவியாக அமைந்துள்ளது. இலங்கையின் உயர் பிணை பெறுமதியாக இது இருப்பதோடு, சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகளே இந்த நம்பிக்கையை முதலீட்டாளர்கள்

### சுட்டிகளின் அடையாளம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாற்றம் இல்லை | → | சிறிது மேம்பட்டுள்ளது | ↗ | சிறிது சீர்கெட்டுள்ளது | ↘ |
| கணிசமானளவு மேம்பட்டுள்ளது | ↑ | கணிசமானளவு சீர்கெட்டுள்ளது | ↓ | | |

மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

பாரிய பொருளாதார நடவடிக்கைகள் சிறப்பான முன்னேற்றத்தை காட்டுகின்ற போதிலும், பொதுத்துறை பொருளாதார முகாமைத்துவம் அவ்வளவு சிறப்பானதாக இல்லை. பொது வர்த்தகத் துறையின் சிலவற்றில் நிதிமோசடிகள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் விசாரணைகள் மூலம் அறியக் .

கிடைத்துள்ளதாக பாராளுமன்ற கோப் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

பருவப் பெயர்ச்சி காற்று கடும் மழையின் காரணமாக இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது

இதற்கு எதிர்மாறாக, தென்கிழக்கு பகுதி வாழ் மக்களும், வனசரணாலய பகுதி விலங்குகளும் பாரிய வரட்சியினால் பாதிக்கப்பட்டன.

திண்ம கழிவுகள் மீள்சுழற்சி வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கு மேல் மாகாணத்தின் தொம்பே பகுதியிலும், தென்கிழக்கின் கிரிந்த பகுதியிலும் மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகரப் பகுதிகளில் இருந்து பெறப்படும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான முறையான செயற்றிட்டம் இல்லாதமையினால் இந்த பிரச்சினைகள் தொடர்கின்றது.

# தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு 27/07/2009 – 26/08/2009

## அரசியல் சூழ்நிலை



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை என்பதனை பிரதான கருப்பொருளாகக் கொண்ட பல்வேறுப்பட்ட விவாதங்கள் அதனை நீக்குவது குறித்தும் முன்வைக்கப்பட்டன. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது உள்ளடக்கப்பட்டால் மாத்திரமே அரசியல-மைப்பு சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதாக மக்கள் விடுதலை முன்னணி (JVP) தெரிவித்து வருகின்றது. எனினும், இது தொடர்பில் தமிழ் மற்றும் முஸ்லீம் அரசியல் கட்சிகளின் விருப்பங்கள் தொடர்பில் எதுவித கருத்துக்களும் வெளியாகவில்லை. பல தமிழ் மற்றும் அரசியற் கட்சிகளாக பிரிந்துள்ளமையால், ஒன்றிணைந்து ஒரே குரலாக ஒலிப்பதற்கான சந்தர்ப்பம் குறைந்தே காணப்படுகின்றது.

எதிர்க்கட்சியில் இருந்த போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மற்றும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது தொடர்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அது தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (மக்கள் பிரிவு) தலைவர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக்கு இடையிலான தொடர்பை உருவாக்குவது குறித்தும் அவர் முயற்சித்து வருகின்றார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுடன் அரசாங்கத்தில் இருந்த சந்தர்ப்பத்திலும், இவ்வாறான முயற்சியை மேற்கொண்டு அது பொதுஜன ஐக்கிய முன்னணியாக உருவாகி, மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டணியுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பாக மாற்றம் பெற்றது.

இவ்வருடம் டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் பிரதான வேட்பாளர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் உள்ளனர். இறுதியாக நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவானதாக தமிழ் மக்களின் 150,000 வாக்குகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றிகரமான போட்டிகளை சந்தித்து வருகின்றது. நடைபெற்று முடிந்த 7 மாகாண சபைத் தேர்தல்களிலும் வெற்றியை பெற்றுள்ளது. தென் மாகாணத்துக்கான தேர்தல் ஒக்டோபர் 10ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் மாத்திரமே எஞ்சியுள்ளது.

இதேவேளை, தேர்தல்களில் போட்டியிட்டு, சிறந்த பெறுபேற்றினை பெறாத, குறிப்பிட்ட பிராந்தியங்களில் மாத்திரம் செயற்படும் அரசியற் கட்சிகளின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

## ஆட்சிமுறைமை



***தண்டனை பயமற்ற நிலையை இல்லாது செய்தல்***

**த**ண்டனை பயமற்ற நடவடிக்கைகளே இந்த மாதத்தில் ஆட்சிமுறைமை தொடர்பில் காணப்பட்ட பிரதான விடயமாக உள்ளது. தண்டனை பயமற்ற நடவடிக்கை என்பது மிகப்பாரிய பிரச்சினையான இலங்கையில் உருவெடுத்துள்ளது. ஆனால், 2006ஆம் ஆண்டு யுத்த முன்னெடுப்புக்களின் ஆரம்பத்தின் பின்னர் இந்த நடவடிக்கை புதிய பரிணாமத்தைப் பெற்றுள்ளது. நூற்றுக்கணக்கான கடத்தல்கள், சட்டவிரோதமான கொலைகள் மற்றும் காணாமல் போதல்கள் பதிவாகியுள்ளதுடன், இவற்றின் காரணமாக சர்வதேச உதவியுடன் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை விசாரணைகளுக்காக அமைக்க வேண்டி தேவையும் உருவாகியுள்ளது.

எவ்வாறாயினும், எவ்விதமான உறுதியான முன்னேற்றத்தையும் அவதானிக்கக் கூடியதாகயில்லை. யுத்த சூழ்நிலைகள் காரணமாக இவற்றை முழுமையாக நிறுத்த முடியவில்லை என்ற காரணத்தை அரசாங்கம் கூறி வந்தது. இந்த சம்பவங்களால் அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் தமிழ் சமூகமாகும். எனினும், இவர்கள் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் அல்லது அதனுடன் தொடர்புடையவர்கள் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்ற போதிலும், பொதுமக்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

அதுதவிர, 2009, மே மாததத்துடன் நிறைவடைந்த யுத்தத்தின் பின்னரும் இந்த கொலைகள் நிறுத்தப்படவில்லை. தற்போது, கொலை செய்யப்படுவர்கள் பாதாளவுலக குழுவுடன் தொடர்புடையவர்கள் பொலிஸாரினால் எதிர்ப்புசண்டையின் போது கொல்லப்படுகின்றனர். சமூகத்திற்கு விரோதமானவர்களே கொல்லப்படுகின்றார்கள் என்ற கருத்து இங்கு முன்வைக்கப்படுகின்றது. இங்கும் மக்கள் மௌனிகாளாக்கப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், அண்மைய கொலைச் சம்பவங்களின் போதான அங்குலான பகுதியில் இரண்டு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமை மற்றும் இளம் மாணவர் ஒருவர் கடத்தப்பட்டு பொலிஸ் அதிகாரிகளால் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் மக்களினால் கடுமையாக எதிர்க்கப்பட்டன. இவர்கள் சிங்களவர்களாக இருக்கின்றமையால் எல்.ரி.ரி.ஈயுடன் தொடர்புடையவர்கள் என்று சொல்வதற்கான காரணங்களும் இல்லாது போயின.

அவர்களது பின்புலம் காரணமாக அவர்களை பாதாளவுலக குழுவுடன் தொடர்புடையவர்கள் என்று நிரூபிக்க முடியாது போனது. இந்த சம்பவங்கள் தண்டனை பயமற்ற நடவடிக்கைகள் தொடர்பில் அதிக கவனத்தை செலுத்த வேண்டிய தேவையையும், மீண்டும் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய தேவையையும் உருவாக்கின.

இந்த கொலைகளுக்கு எதிராக பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஊடகங்களுக்கும் வாய்ப்பாக அமைந்தன. பொலிஸாரினால் சட்டத்தை காக்கத் தவறியமை மற்றும் அதிகார துஸ்பிரயோகம் என்பன அரசாங்கத்தின் நடைமுறைப்படுத்த தவறிய அரசியலமைப்பின் 17ஆவது சீர்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுயேச்சையான பொலிஸ் ஆணைக்குழுவினை மீள அமைப்பதற்கான தேவையை உருவாக்கியுள்ளமையை எதிர்க்கட்சிகளும், சிவில் சமூகக் குழுக்களும் முன்வைக்க ஆரம்பித்துள்ளன.

## பாதுகாப்பு

மாவிலாறு வெற்றியின் மூன்றாவது ஆண்டு, ACF கொலைகளின் மூன்றாவது ஆண்டு மற்றும் முன்னணி தமிழ் அரசியல்வாதி கலாநிதி. நீலன் திருச்செல்வம் கொலை செய்யப்பட்டதன் 10ஆவது ஆண்டு என்பனவற்றை இந்த மாதம் குறித்துள்ளது. எஞ்சியுள்ள தீவிரவாதத்தை தேடியழிக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக ஆகஸ்ட் ஆறாம் திகதி எல்.ரி.ரி.ஈயின் புதிய தலை-வராக தன்னை அறிவித்துக் கொண்ட கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டமை மிகவும் முக்கியமான சம்பவமாக அமைந்துள்ளது. கே.பியின் கைதை அடுத்து, வெளிநாடுகளில் 300மில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்துக்களுடன் வசித்து வரும் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ச உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கே.பி கைது செய்யப்படுவதற்கு முன்னர், எல்.ரி.ரி.ஈயின் சட்டஆலோசகரான விஸ்வநாதன் ருத்ரகுமாரன் இந்தியாவின் டெஹெல்கா (Tehelka) இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியில் மீண்டும் எல்.ரி.ரி.ஈயினை ஒருங்கிணைத்து ஈழத்தின் "நாடு கடந்த அரசாங்கத்தை" அமைக்கப் போவதாக குறிப்பிட்டிருந்தார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும், வரவுசெலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கான செலவீனம் குறைக்கப்படாது என்றும், இராணுவ இயலுமையை மேலும் மேம்படுத்துவதற்கு புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்க வேண்டியுள்ளதாகவும், எல்.ரி.ரி.ஈ அதிகாரத்தில் இருந்த பகுதிகளில் பாதுகாப்புக்காக புதிதாக படைவீரர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வடக்கில் பாதுகாப்பு குறைக்கப்படக் கூடாது எனவும் எல்.ரி.ரி.ஈ கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக இராணுவ முகாம்களை நீக்கி நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்பட வேண்டும் என பாதுகாப்பு கூட்டுப்படை தளபதி சரத் பொன்சேக்காவும் குறிப்பிட்டுள்ளார். புதிதாக விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பாதுகாப்பு படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்போது எல்.ரி.ரி.ஈயினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களையும், வெடிப்பொருட்களையும் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நாட்டின் கடற்பிரதேசத்தின் பாதுகாப்புக்காக தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இயலுமையை கட்டியெழுப்புவதற்கு புதிய விமானங்களின் கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்தல் போன்றவற்றின் தேவையை இலங்கை விமானப் படை தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

## மனித உரிமைகள்

கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது குறிப்பிடக் கூடிய வகையில் மனித உரிமைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனினும், மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் அதிகம் கவனத்திற் கொள்ளப்பட்டு வருகின்றன. இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகள், புனர்வாழ்வு முகாம்கள் மற்றும் சிறையில் இருப்பவர்களின் உரிமைகள், என்பன தொடர்பிலும் மனித உரிமைகளுக்காக அரசியலமைப்பில் காணப்படும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு போன்ற உறுப்புரைகள் தொடர்பிலும் பல குரல்கள் எழுகின்றமையை இந்த மாதத்தில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இந்த உறுப்புரைகளுடன் தொடர்புடைய அரசியலமைப்பின் 17ஆவது திருத்தம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழுக்களின் பயன்பாட்டுக்கான செயற்பாடுகள் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன. அங்குலானையில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்ட விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி இவ்வாறான சம்பவங்களை வரவேற்கத்தக்க விடயமாக கருத முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார். இந்த விடயங்கள் தொடர்பில் சற்று சுருக்கமாக நாம் பார்க்கலாம்.

*இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகள்*

அண்மையில் வவுனியா மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருகின்றது. சுமார் ஒரு மாதத்துக்கு முன்னரே பருவப்பெயர்ச்சி குறித்து அறிந்திருந்த அதிகாரிகள் முறை-றயான வடிகால் வசதிகளை செய்திருந்தால், முகாம்கள் வெள்ளத்தில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றியிருக்கலாம். மழை காரணமாக முகாம்களில் வெள்ள நீர் தேங்க பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. முகாம்களின் கூரை வரை நீர்மட்டம் உயர்ந்துள்ளமையை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் இந்த நிலையை தெளிவாக விளக்குகின்றன. இதன் விளைவாக, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை தவிர ஏனைய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் 2 வாரங்களுக்குள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவர் என மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்துள்ளார். இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவதற்கு முன்னர் அவர்களுடைய முகவரி குறித்த தகவல்கள் அரச அதிபரின் ஊடாக உறுதிப்படுத்தப்படும் என்ற அறிவித்தலை அவர் இதற்கு முன்னர் வெளியிட்டிருந்தார். இவர்கள் பல வருடங்களுக்கு முன்னர் வன்னிக்கு இடம்பெயர்ந்தவர்கள் என்பதால், இவர்கள் குறித்த தகவல்களை உறுதி செய்வதில் சிக்கல் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே அடுத்த இரண்டு வாரங்களில் குறிப்பிட்டப்படி இவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்களா என்பது கேள்விக்குரிய விடயமாகவுள்ளது. அது அவ்வாறேயிருக்க, கண்ணி வெடிகள் அகற்றப்பட வேண்டும் மற்றும் இடம்பெயர்ந்தவர்களில் ஊடுருவியுள்ள எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் அடையாளங் காணப்பட வேண்டும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதற்காக இடம்பெயர்ந்தவர்கள் முட்கம்பிகளுக்குள் முடங்கியிருப்பதை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. இடம்பெயுர்ந்தவர்கள் தமது உறவினர்களை சந்திப்பதற்கும், ஊடகங்கள் சுதந்திரமாக பிரவேசிப்பதற்குமான தடை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

*சட்ட ஒழுங்கு*

குறித்த காலப்பகுதியில் 26கைதுகளும், 24 கொலைகளும் பதிவாகியுள்ளன. இதன் மூலம் சட்டஒழுங்கு குறித்து அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. எவ்வாறாயினும், பொலிஸாரினால் பாதாளவுல குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, அதன் பின்னர் " *தப்பிச் செல்ல முயற்சித்தார்கள் அல்லது பொலிஸாரை தாக்க முயற்சித்தார்கள்*" என்ற காரணங்களை குறிப்பிட்டு கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த அனைத்து சம்பவங்களிலும் பொலிஸாரினால் கூறப்பட்ட காரணங்கள் ஒரே மாதிரியானதாக இருப்பதே சந்தேகம் தோன்றுவதற்கு வழி வகுத்தது. இவற்றில் அங்குலான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம் பொலிஸாரின் முரட்டுத்தன்மையை வெளிப்படுத்துவதாக இருந்தது. இந்த இளைஞர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் விளைவாக குறித்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அனைவரும் இடம் மாற்றம் செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். இதற்கு இணையான மற்றுமொரு சம்பவமாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மகனுக்காக, பொலிஸ் அதிகாரிகள் சிலர் இளைஞர் ஒருவரை கைது செய்து தாக்கிய சம்பவம் காணப்படுகின்றது. இந்த சம்பவத்தையடுத்து குறித்த பொலிஸ் அத்தியட்சகர் குற்றவியல் பிரிவு தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அத்துடன் அவரது மனைவியும் சில பொலிஸ் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்னர். இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் சுமார் 170 பொலிஸ் அதிகாரிகள் அதிகாரத் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று, அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். இந்த சம்பவங்கள் நாட்டின் சட்டஒழுங்கில் சீர்குலைவை காட்டும் அதேவேளை, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மத்தியில் ஒழுங்கீனம் காணப்படுவதனையும் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இந்த மாதத்தில் பத்திரிகை தகவல்களின் பிரகாரம் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டவர்களில் ஒருவர் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் உதவி இணைப்பாளரும் அடங்குகின்றார். இந்த கடத்தல் பின்னர் மிரிஹான பொலிஸாரால் தவறாக கைது செய்யப்பட்ட

ஜூன் 21ஆம் திகதி முதல் ஜுலை 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற கைதுகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகள் தொடர்பான தகவல்கள்.

(மூலம்: டெய்லி மிரர், ஐலன்ட், வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, லங்காபேஜ்)

| | கைதுகள் | கடத்தல்கள் | காணாமல் போதல்கள் | கொலைகள் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 22 | 1 | | 8 |
| களுத்துறை | 1 | | | |
| கம்பஹா | 2 | | | 2 |
| காலி | | | | 1 |
| மாத்தறை | | | | 1 |
| மாத்தளை | | 1 | | |
| இரத்தினபுரி | | | | 1 |
| அனுராதபுரம் | | | | 2 |
| அம்பாறை | | 1 | | 3 |
| திருகோணமலை | | | | 2 |
| மட்டக்களப்பு | | 1 | | 1 |
| மன்னார் | 1 | | | |
| யாழ்ப்பாணம் | | | 1 | 3 |
| | 26 | 4 | 1 | 24 |

சம்பவமாக மாறியது. இவ்வாறான கைதின் போது அமைச்சருக்கு அறிவிக்க வேண்டும் என்ற நடைமுறையை பொலிஸார் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. இந்த சம்பவங்கள் தண்டனை பயமற்ற நிலையை காட்டுவனவாக அமைந்திருந்தன. இதனால் ஆட்கள் கடத்தப்பட்டார்களா அல்லது கைது செய்யப்பட்டார்களா என்ற குழப்பநிலையும் காணப்படுகின்றது. இதனையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்ற உத்தரவை ஜனாதிபதி பணித்துள்ளார்.

வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் உள்ள சிலரும் வெள்ளைவானில் கூட்டிச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள் என்ற தகவல்கள் இல்லை. விசாரணைகளுக்காக பாதுகாப்பு அதிகாரிகளால் இவர்கள் அழைத்துச் செல்லப்படலாம் அல்லது வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக சிலர் வெள்ளைவானின் உதவியுடன் முகாம்களுக்கு வெளியே சென்று வெளிநாடுகளுக்கு தப்பிசெல்லலாம் என்ற சந்தேகமும் நிலவுகின்றது.

பியகம பகுதியில் இரண்டு சடலங்களும், கிரான்ட்பாஸ் பகுதியில் ஒரு சடலமும் கொழும்பு – 07 கால்வாய் பகுதியில் இரண்டு பெண்களின் சடலங்களும் இம்மாதப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. இந்த உயிரிழப்புக்களுக்கான சரியான காரணங்கள் இதுவரை கண்டறியப்படாததுடன், சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மஸ்கெலியப் பகுதியில் இருந்து கொழும்புக்கு வந்து வேலை செய்து வரும் சந்தர்ப்பத்தில் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் விடுத்துள்ள அறிக்கை தவறானது எனவும், மீண்டும் பிரேத பரிசோதனை செய்யப்பட வேண்டும் எனவும் குறித்த பெண்களின் பெற்றோர் கோரியுள்ளனர்.

பத்திரிகைகளில் வெளியாகியுள்ள இந்த சம்பவங்கள் தொடர்பான செய்திகள் யாவும் நாட்டின் சட்டஒழுங்கு நிலையை பிரதிபலிப்பதாகவே உள்ளன. கடத்தல், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகள் தொடர்பான செய்திகள் சுயதணிக்கை காரணமாக பத்திரிகைகளில் பெரிதாக இடம்பிடித்திருக்கவில்லை. முகாம்களில் இருந்து வெள்ளைவானில் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை என்று அவர்களது உறவினர்கள் கூறியிருந்த கருத்துக்கள் போன்ற காணாமல் போதல்கள் தொடர்பில் மாத்திரமே இம்மாதத்தில் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

*நடமாடும் சுதந்திரம்*

ஏ9 வீதியூடாக பயணிகள் யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்கு சுதந்திரமாக பயணஞ் செய்வதற்கான பஸ்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமை, மாவட்டத்தில் மக்களுக்கான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்ற எதிர்பார்ப்பை உருவாக்கியிருந்தது. எனினும், பின்னர் அது மாதிரி பஸ் சேவை எனவும், தொடர்ச்சியான பஸ்சேவைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. பாஸ் நடைமுறை மற்றும் யாழ் மாவட்டத்தை விட்டு வெளியேறுவதற்கு இராணுவத்தின் அனுமதி பெறவேண்டிய நடைமுறையும் தொடர்ந்தும் அமுலில் உள்ளன. ஏ9 பாதையூடான பஸ்சேவைகள் இன்னும் கனவாகவே உள்ளது. இராணுவத்தின் முறையான அனுமதியைப் பெற்ற லொறிகள் வடக்கிலிருந்து ஏ9 வீதியூடாக பயணித்து வருகின்றன. எவ்வாறாயினும், யுத்தம் நிறைவடைந்துவிட்டதாக அறிவித்துள்ள போதிலும், வடக்கிலுள்ள மக்கள் சுதந்திரமாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு நடமாட முடியாத நிலை காணப்படுகின்றது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

தேர்தலின் பின்னர் மீன்பிடித் தடை தளர்த்தப்படும் என கூறியிருந்த போதிலும் யுத்த காலத்தின் போது மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மீன்பிடித்தடை தொடர்கின்றது.

*சாதகமான எடுத்துக்காட்டுக்கள்*

இந்த தாக்கமான சம்பவங்களில் இருந்து விலகி மனித உரிமைகள் விடயத்தில் சில சாதகமான விடயங்களை குறித்த மாதத்தில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. யாழ் மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைத் தேர்தல்கள் நீதியானதாக நடைபெற்றன. வன்முறைச் சம்பவங்கள் மிகவும் குறைவானதாகவே பதிவாகியிருந்தன. வாக்களிக்கத் தகுதிப் பெற்றவர்களில் 20 %மானவர்களே வாக்களித்திருந்த போதிலும் குறித்த பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு நீண்ட காலத்திற்கு பின்னர் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டமை கவனத்திற் கொள்ளவேண்டிய சிறந்த விடயமாகும்.

வன்னி மற்றும் வேறுபகுதியில் உள்ள இடம்பெயர்ந்தவர்களில் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமையானது மற்றுமொரு சாதகமான மாற்றமாக காணலாம். உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய 1187 மாணவர்களில் 170 மாணவர்கள் சிறுவர் போராளிகளாக இருந்தவர்களாவர். வன்னி முகாம்களில் இருந்து அம்பேபுஸ்ஸ புனர்வாழ்வு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 110 சிறுவர் போராளிகளுக்கு தமது பெற்றோர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமை மற்றுமொரு

## பொருளாதாரச் சூழ்நிலை

பொருளாதாரத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டால், உலக பொருளாதாரத்தின் ஆரோக்கியமே மிக முக்கியமான விடயமாக ஆகஸ்ட் மாதத்தில் இருந்தது. இலங்கையில் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஆரம்பித்தவாறே பணவீக்கம் தொடர்ச்சியாக குறைந்துவருகின்றது. வாடிக்கையாளர் விலை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 0.9% ஆக காணப்பட்டது. இதன் காரணமாக மத்திய வங்கி தனது வட்டி வீதத்தை குறைத்து, வங்கிக் கடன்கள் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கு ஊக்குவித்தது. வட்டிவீதத்தை குறைத்துள்ளமையானது, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவுசெய்து சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கட்ட கடனுதவியைப் பெறுவதற்கு உதவி செய்யும்.

பணவீக்கத்தின் அளவு வெகுவாக குறைந்து வந்தாலும், 2008ஆம் ஆண்டில் ஏற்பட்ட பணவீக்கத்தால் உருவான அழுத்தம் இன்னும் முழுமையாக தீரவில்லை. ஆகஸ்ட் மாதத்தில் பஸ்உரிமையாளர்கள் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர். அதேவேளை, தோட்டப்புற தொழிலாளர்களும், மின்சார சபை

ஊழியர்களும் சம்பள உயர்வு கோரி போராட்டம் நடத்தினர். விலை கட்டுப்பாடு விதிக்கப்பட்ட சமையல் எரிவாயு போன்ற வாடிக்கையாளர் தேவைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் பொருட்களின் விலை அதிகரிப்பு குறித்து கவனஞ் செலுத்துமாறு கோரியிருந்தன.

அமெரிக்க முதலீட்டு வங்கியின் பிராங்க்ளின் டெம்ளட்டன் நிதியம் 875மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கத்தின் நான்கு வருடங்கள் மற்றும் ஆறு வருடங்கள் பிணைமுறியில் முதலீடு செய்ததன் ஊடாக மத்திய வங்கியின் வெளிநாட்டு சேமிப்புக்கள் உத்வேகமடைந்துள்ளன. இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய கடனுதவி டெம்பளட்டன் நிதியத்தின் நம்பிக்கைக்கு உரமாக இருந்த போதிலும், இலங்கையின் கவர்ச்சிகரமான வட்டிவீதங்களும் அதற்கு காரணமாக இருந்தன. அமெரிக்காவின் தற்போதைய பிணைமுறி வீதம் 3% க்கு குறைவாகும். அதனுடன் ஒப்பிடும்

போது இலங்கையின் நான்கு வருடங்களுக்கான பிணைமுறியின் வீதம் 13% க்கு நெருக்கமானதாகும். ஆறு வருடங்களுக்கான பிணைமுறியின் பெறுமதி 15% ஆகும். டெம்பளட்டனின் முதலீடு இலங்கையின் வெளிநாட்டு சேமிப்பின் அளவுக்கு உரமாக அமைந்துள்ளதுடன், 2008 இன் இறுதி காலாண்டு மற்றும் 2009இன் முதற் காலாண்டு பகுதியில் மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி பட்டியல் காரணமாக ஏற்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்ற சிக்கலை குறைப்பதற்கும் துணை புரிந்துள்ளது. எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் போன்று, டெம்ப்ளட்டனின் பணத்தை திறைசேரியினால் உள்ளூர் தேவைகளுக்கோ அல்லது அபிவிருத்தி பணிகளுக்கோ பயன்படுத்த முடியாது. பிணைமுறி அமுலில் இருக்கும் காலம் வரை வருடாந்தம் சுமார் 100மில்லியன் அமெரிக்க டொலர்களை வட்டியாக திறைசேரி வழங்க வேண்டும்.

2011ஆம் ஆண்டின் ஆரம்பத்திற்குள் 5.0 இலிருந்து 6.0 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு சேமிப்பாக எதிர்பார்த்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவிக்கின்றார். கடந்த ஜூலை மாதம் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை வாக்குறுதி வழங்கிய 3.6மில்லியன் அமெரிக்க டொலர்கள் சேமிப்பிலும், இந்த தொகை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக பொருளாதாரம் குறித்த செய்திகள் ஓரளவு திருப்தியாக இருக்கும் நிலையில், சிறிய அளவிலான பொருளாதாரத்தின் பொதுத் துறை நிதி முகாமைத்துவத்திலும் அதே நிலையை கூறமுடியாதுள்ளது. பொது நிறுவனங்களின் நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பாராளுமன்ற அமைப்பின் செயற்பாடுகள் குறித்து அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் கடும் விவாதம் நடைபெற்றது. கோப் குழுவின் அங்கத்துவம் 12இலிருந்து 33ஆக அதிகரித்துள்ளது. அவற்றில் 16 எதிர்கட்சியினுடையதாகும். சமார் 20 வர்த்தகங்களின் கணக்குகளை ஆழ்ந்து பரிசீலிப்பதே கோப் குழுவின் பணியாக இருக்கின்றது.

ஆகஸ்ட் மாதத்தில் கோப் வெளியிட்டிருந்த அறிக்கையில், பல பொது வர்த்தகங்கள் கொள்வனவு செய்பவர் குறித்த மதிப்பீடு அல்லது கடன்களை மீள வழங்குவதற்கான கொள்வனவு செய்பவரின் இயலுமை குறித்து அறிந்து கொள்ளாது கடன்களை வழங்குவதாக விமர்சிக்கப்பட்டிருந்தது. பொது வர்த்தகங்களில் உள்ளக நிதி நிர்வாகத்தில் உள்ள பிழைகளையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது. மிகவும் முக்கியமான விடயங்கள் குறித்து சட்டமாஅதிபரிடம் முறையான சட்டஆலோசனைகளை பெறுவதற்கு இந்த நிறுவனங்கள் தவறியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் ஆகியஇலங்கையின் இரண்டு பாரிய நிறுவனங்களுமே வரிசெலுத்துபவர்களினால் பங்குடைமையாக்கப்பட்டுள்ள போதிலும், இரண்டுமே தனியார் நிறுவனங்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளமையால் கோப்பின் கண்காணிப்புக்கு உட்பட முடியாத சூழ்நிலை உள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளிடம் விசா கட்டணம் அறவிட எண்ணியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களுக்கு விஜயம் செய்பவர்களுக்கும், வேறு இடங்களுக்கு விஜயம் செய்வபவர்களுக்கும் மேலும் இரண்டுவகையான கட்டணமுறைகளை அறிமுகப்படுத்தலாம். இதனை விசா கட்டணத்துடன் இணைந்து கலசார கட்டணம் என்ற முறையில் பெறலாம். தற்போது காணப்படும் கட்டண முறையில் பல ஊழல் மோசடிகள் நடைபெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இதனால், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களுக்கு ஒரேயளவான அனுமதி கட்டணங்களை அறவிட முடியும். விசா மற்றும் கலாசார வரிகள் மூலம் பெறப்படும் வருமானத்தை கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளின் நிர்வாகத்திற்கு பயன்படுத்த முடியும்.

## சுற்றுச் சூழல்

நாடு முழுவதிலும் காலநிலையில் மாற்றம் காணப்பட்டது. வரட்சி நாட்டின் பல பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், ஜூலை மாத இறுதிப் பகுதியில் கடும் மழைவீழ்ச்சி பதிவாகியதுடன் வெள்ளப் பெருக்கும் சில பகுதிகளில் ஏற்பட்டது. ஆகஸ்ட் மாதத்தின் நடுப்பகுதியில் வடமேற்கு மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் கடும் காற்றும் மழைவீழ்ச்சியும் பதிவாகியிருந்தது. மழைக் காலநிலை காரணமாக வவுனியாவின் மெனிக்பார்மும் வெகுவாக பாதிக்கப்பட்டது. வலயம் 2 மற்றும் 4 சுமார் ஒரு இலட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். வடிகால-மைப்பு உட்கட்டமைப்பு தொடர்பில் பாரிய கேள்வி எழுந்துள்ளதுடன், மலசலகூடங்கள் உடைந்துள்ளன. இதனால் மனிதக் கழிவுகள் வெள்ள நீருடன் கலந்து முகாம் பகுதிகளில் சுகாதாரமற்ற நிலை தோன்றியுள்ளது. முகாம்களுக்குள் தையோயிட்டு காய்ச்சல் பரவியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சில நாட்களின் பின்னர் இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் ஏற்பட்ட கடும் வெள்ளம் காரணமாக சுமார் 3000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் ஒரு குறுகிய கால இடைவெளியில் மத்திய பருவப்பெயர்ச்சி மழை வவுனியாவின் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் பாரிய பாதிப்பை மீண்டும் ஏற்படுத்தியது. இதன் போது சுமார் 2000 கூடாரங்கள் மீள பயன்படுத்த முடியாத அளவில் சேதமடைந்தன. ஒக்ரோபர் மாதத்தில் வடகிழக்கு பருவமழை பெய்ய இருப்பதனால், முகாம்களின் நிலை குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. கடும் மழை காரணமாக மலையகத்தில் பல இடங்களில் மண்சரிவு இடம்பெற்றதுடன், இருவர் உயிரிழந்தனர்.

இதேவேளை, நாட்டின் தென்கிழக்கு பகுதியில் தொடர்ந்தும் வரண்ட காலநிலை நிலவுகின்றது. நீர்பிரச்சினையும் திஸ்ஸ மஹாராம, பதுளை, மஹியங்கனை பகுதிகளில் காணப்படுகின்றது. நீர்நிலைகள் வற்றி வருவதனால் அப்பகுதிகளில் வசிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். விவசாய நிலங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. யால மற்றும் புத்தல வனசரணாலயங்களின் விலங்குகளும் நீர்நிலைகள் வற்றியுள்ளமையினால் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், வன இலாகா திணைக்கள அதிகாரிகள் வாகனங்கள் மூலம் நீர் கொண்டு வந்து குளங்களில் நிறைத்து விலங்குகளின் நீர்தேவையை நிறைவுசெய்து வருகின்றனர். கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் செயற்றிட்டத்திற்கான நிர்மாணப் பணி காரணமாக ஆகஸ்ட் மாதத்தின் நடுப்பகுதியில் தொம்பே மற்றும் கிரிந்த பகுதிகளில் பொதுமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடு தோன்றியது.தென்கொரியாவின் நிதியுதவியின் கீழ் அமைக்கப்படும் இந்த திட்டம் தொம்பே பகுதியில் இருந்து கழிவுகளின் அளவை குறைப்பதற்கான திட்டம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனினும், காடுகளை அழித்து இதற்கான நிர்மாணப் பணிகள் நடைபெறுவதனால், மரங்களை வெட்டுவதே இந்த செயற்பாட்டின் நோக்கம் என்றும், இதனால் சூழல் மாசடையும் எனவும் அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். இதேபோன்றதொரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கிரிந்த பகுதியிலும் இடம்பெற்றது. கழிவு மீள்சுழற்சி செயற்றிட்டத்தின் காரணமாக நீர் மற்றும் சூழல் மாசடைவதாக அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.ஜூலை மாதத்தில் டெங்கு நோய் பரவல் குறைந்த போதிலும், இந்த செயற்றிட்டத்தின் காரணமாக மீண்டும் டெங்கு நோய் உருவாகும் சூழ்நிலை காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். இந்த வருடத்தில் டெங்கு நோய் காரணமாக சுமார் 240 பேர் உயிரிழந்துள்ளதுடன், 24ஆயிரம் பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம்

**அ**ச்சு ஊடகங்கள் குறைந்த சிறப்புரிமைகளை பயன்படுத்தியே ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற பொலிஸ் தொடர்புடைய இரண்டு சம்பவங்களை அறிக்கைப்படுத்தியிருந்தன. ஒரு சம்பவத்தில் மாணவர் ஒருவர் கடத்தப்பட்டு முரட்டுத்தனமாக தாக்கப்பட்டார். மற்றைய சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் பொலிஸ் காவலில் இருந்த போது உயிரிழந்தனர். இந்த சம்பவங்களால் கோபமடைந்த பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டங்கள் அச்சுஊடகங்களில் முதல் பக்கத்தை நிரப்பின. ஆசிரிய தலையங்கங்களாகவும், வேறு செய்திகளாகவும் இந்த சம்பவம் கண்டிக்கப்பட்டதோடு, அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் மீள்நடைமுறை குறித்த விடயங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த இரண்டு சம்பவங்களிலும் ஊடகமானது தமது தரப்பு பார்வையை உள்ளடக்கியதாகவே செய்தி வெளியிட்டிருந்தது. இந்த செயற்பாட்டில் மக்களின் விருப்பும் அவர்களுடைய அக்கறையும் குறைந்தபட்சம் கோட்பாட்டு ரீதியானதாக பதியப்பட வேண்டும்.

இந்த கண்காணிப்பு ஊடகம் மீது குற்றஞ்சாட்டும் நடவடிக்கை அல்ல. அதேசந்தர்ப்பத்தில், இதனூடாக துடிப்புள்ள சிவில் சமூகத்திற்கும் சுதந்திர ஊடகத்திற்கும் இடையிலான உறவை கண்டுகொள்ள கூடியதாகவுள்ளது. அங்குலான பொலிஸ் நிலையத்தைச் சுற்றிவளைத்த ஆயிரக்கணக்கானோர் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்கள். அவர்களின் ஒருங்கிணைந்த குரலும், அதனை ஊடகங்கள் வெளிப்படுத்திய விதமும் மக்களுக்கு சாதகமனாதாக உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளை தூண்டியது எனலாம். தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான தகவல் சுதந்திர சட்டமூலம் இந்த நாட்டில் இல்லை. தகவல்கள் விநியோகிக்கப்படுவதை தடுத்து நிறுத்தும் அரசாங்கத்தின் தகைமை காரணமாக, ஊடகங்கள் சுயக்கட்டுப்பாட்டுடன் செய்திகளை வெளியிட வேண்டியுள்ளது.

இந்த விடயத்தில் யாரை கடிந்துகொள்வது, நம்பகத்தன்மை வாய்ந்த தகவல்களும், மூலாதாரங்களும் உருவாகுவதற்கான சூழலை கட்டியமைக்க வேண்டியது சிவில் சமூகங்களின் பொறுப்பாகும். வதந்திகளும், பொல்லாப்புக்களும் எங்கள் சமூகத்தில் பொதுவான விடயமாகிப் போயுள்ளது. அரசியலுடனான எங்கள் இனக்கவர்ச்சியினால் அது மேலும் விரிவாகியுள்ளது. உணர்வு சார்ந்து முடிவுகளை எடுப்பதை விட, ஆழமாக சிந்தித்து முடிவுகளை எடுப்பதே சிறந்தது. இது சிலநேரங்களில் மாறியும் அமையலாம். ஆனால், அங்குலான சம்பவத்தின் போது உணர்வு சார்ந்த வெளிப்பாடு எழுப்பப்பட்டமையே சிறந்ததொரு முடிவு எடுப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

அவ்வாறில்லையெனின், செயற்றிறன் மிக்க சிவில் சமூகம் பகிரப்பட்ட பெறுமதிகளின் தொகுதியை முன்னிறுத்த வேண்டிய தேவை தற்போது உள்ளது. அது எங்கள் சிக்கலான நிலைமைகளை விளக்கும். பொதுவாக சமூகம் என்பது சாத்வீகமானது மாத்திரம் அல்ல, அது மந்தமானது கூட. அதே பொதுமக்களை அங்கத்துவமாக கொண்ட சிவில் சமூகங்கள், அவர்களின் தேவையையும், விருப்பங்களையும் தெளிவுபடுத்தப்பட்ட வேண்டும். அது எப்போது மனிதன் அல்லது இயற்கையால் ஏற்படுத்தப்படும் அனர்த்தத்தின் போதானதாக இருக்க வேண்டுமா?.

## மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம்

### மெனிக் பார்மில் வெள்ளம்

**ஆ**கஸ்ட் 14ஆம் திகதி வவுனியாவில் தொடர்ச்சியாக காணப்பட்ட கடும் மழை மற்றும் காற்று காரணமாக மெனிக் பார்ம் நலன்புரி முகாம்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட முகாம்கள் வெகுவாக பாதிக்கப்பட்டன. 3ஆம் மற்றும் 4ஆம் வலயங்களே அதிகம் பாதிக்கப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வலயம் 4இல் இருந்த 36,785 பொதுமக்களில் 17,539 பேர் இதனால் பாதிக்கப்பட்டதோடு, 37 கூடாரங்களில் 16 கூடாரங்கள் சேதமடைந்தன. கழிவுவாய்க்கால்களில் நீர்தேங்கி சுற்றாடல் மாசு ஏற்பட்டதோடு, முகாம்களுக்கு நீர்கொண்டு செல்லும் வாகனங்கள் சேற்றில் சிக்கி பயணிக்க முடியாதநிலை தோன்றியது. இதனால் நீர்விநியோகம் தடைபட்டதோடு, உணவு விநியோகமும் தடைபட்டது. தொற்றுநோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதால், அரசாங்கமும், ஐ.நாவும் இணைந்து மலசலகூடங்களை தரமானதாக அமைப்பது தொடர்பில் கவனஞ் செலுத்தியுள்ளன. அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள், ஐ.நாவினால் அமைக்கப்பட்ட மசலசலகூடங்களை விட அதிககாலம் பயன்படுத்தக் கூடியவையாகும். ஐ.நாவினால் அமைக்கப்பட்ட மலசலகூடங்கள் 6 மாதங்கள் பயன்படுத்தக் கூடியதாகவே அமைக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்தவர்கள் தொடர்ந்து முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவே நீண்டகாலம் பயன்படுத்தக் கூடியதாக மலசலகூடங்கள் அமைக்கப்படவில்லை என ஐ.நா மற்றும் வேறு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும், இடம்பெயர்ந்தவர்கள் 6 மாத காலத்துக்கும் அதிகமாக முகாம்களில் இருக்க நேரிடும் என்பதனாலேயே முன்னெச்சரிக்கையாக நீண்ட காலம் பயன்படுத்தக் கூடியதாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

சில மணித்தியாலங்கள் பெய்யும் மழைக்கே, முகாம்களில் பாதிப்பு அதிகரிக்கும் நிலையில், தொடர்ச்சியான பருவ-மழைக்காலநிலை ஆரம்பித்தால் முகாம்களின் நிலை எவ்வாறானதாக இருக்கும் என்பதே இப்போது பாரிய கேள்வியாக உள்ளது. இந்த அனர்த்தங்களை நினைவில் கொண்டு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

இடம்பெயர்ந்தவர்களின் இந்த மோசமான நிலைமை தொடர்பில் தேசிய ஊடங்களில் குறைந்தளவிலான பிரசாரமே கொடுக்கப்பட்டது மற்றுமொரு தடங்கலுக்குரிய அபிவிருத்தியாக இருக்கின்றது. வடக்கில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டிருக்க, தெற்கின் பாதிக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலானோர் மிகமுக்கியமான செய்திகளாக இடம்பிடித்திருந்தனர்.

### மீள்குடியேற்றம்

வன்னியில் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த இடம்பெயர்ந்தவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு கண்ணி வெடி அகற்றுவதனை இலங்கை இராணுவம் மற்றும் கண்ணி வெடி அகற்றும் நிறுவனம் ஆகியவற்றை இணைந்து செயற்படுமாறு தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சு கோரியுள்ளது. கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விரைவில் இவர்களை மீளக்குடியமர்த்துமாறும் பலபக்கங்களிலிருந்தும் அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் வருகின்றன. மீளக்குடியேற்றத்திற்கு முன்னர் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய வசதிகளும் குறித்த பகுதிகளில் அமைத்துக் கொடுக்கப்படும் என உயர் அரசாங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன், மீளக்குடியமர்த்தப்படவுள்ள பிரதேசங்களின் தேவைகள் தொடர்பில் அடையாளங் காணுமாறும், பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

# மாவட்ட ரீதியிலான பகுப்பாய்வுகள் ஜுலை 27 – ஆகஸ்ட் 28 2009

## அம்பாறை

**களநிலமைகள்**

அம்பாறையில் பாதுகாப்பு நிலைமைகள் அமைதியை குலைக்கும் விதத்தில் இருந்தன. இந்த காலப்பகுதியில் பொதுமக்கள் கடத்தப்பட்டமை, கடத்தல்கள், பாலியல் பலாத்காரம் மற்றும் கொலைச் சம்பவங்கள் பதிவாகின. இந்த சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு பொதுமக்கள் மத்தியில் தயக்கம் காணப்பட்டது. இந்த சம்பவங்களில் அரசியல் ஆதரவுடன் இயங்கும் குழுக்கள் சம்பந்தப்பட்டிருந்தமையே அதற்கு காரணம். ஆயுத குழுக்களின் ஆயுதங்களை களைவ-தில் அரசாங்கம் தோல்வியடைந்தமையும் இதற்கு மற்றுமொரு காரணமாக இருக்கின்றது.

மறைந்துள்ள எல்.ரி.ரி.ஈயினருக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் தொடர்ச்சியாக மோதல்கள் சில இடம்பெற்றன. இந்த சம்பவமும் மக்கள் மத்தியில் பதற்ற நிலையை தோற்றுவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் ஏனைய விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தல், அரசியலில் நிலையான தன்மை, அபிவிருத்தி வளங்களில் சமமான பங்கீடுகள், புதிய முதலீட்டுடனான மாவட்ட அபிவிருத்தி என்பன அதில் முக்கிய இடம்வகிக்கின்றன. இதேவேளை, உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளான வீதி அமைப்பு, நீர் விநி-யோகம் மற்றும் நீர்ப்பாசன வசதி, தபால் மற்றும் தொலைத் தொடர்பு சேவைகள் என்பனவும் முன்னெடுக்கப்படுகின்றன.

**செயற்பாட்டாளர்கள்**

அரசாங்கம், மாவட்ட அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்பு படையினர் போன்ற அம்சங்கள் பிரதான செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றன.

**மாற்றங்கள்**

இடைக்கிடை இடம்பெறும் எல்.ரி.ரி.ஈ மற்றும் பாதுகாப்பு படையினருக்கு இடையிலான மோதல் மாவட்டத்தில் பதற்ற நிலையையும், அபாயம் குறித்த எச்சரிக்கைத் தன்மையையும் அதிகரித்துள்ளன. சமாதானத்தைக் கட்டியெழுப்புதலே மாவட்டத்தின் மிகவும் முக்கியமான தேவையாக உள்ளது. அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து மக்களின் உதவியுடன் அந்த தேவையை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்த வேண்டும். அத்துடன், மக்கள் மத்தியில் அவர்களது உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். எல்.ரி.ரி.ஈயினரால் சுமார் மூன்று தசாப்தங்கள் ஆளப்பட்ட மக்களுக்கு ஜனநாயகம் என்பது ஒரு புதிய விடயபொருளாகவே இருக்கின்றது. மாவட்டத்தில் புதிய முதலீடுகளை ஏற்படுத்துவதற்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

## மட்டக்களப்பு

**களநிலமைகள்**

துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகள் அதிகரித்து காணப்படுகின்றன. கடத்தல்கள் மற்றும் சில சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்த குழுக்களின் ஆயுதங்களை களைவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை தோல்வியடைந்துள்ளது. அரசியல் பின்புலத்துடனேயே இந்த ஆயுதக் குழுக்கள் செயற்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல், அரசியல் மற்றும் பாதுகாப்பு ஸ்திரத்தன்மை, பாரிய முதலீடுகளின் தேவை, அபிவிருத்தி வளங்களின் சமமான பங்கீடுகள் என்பனவே மாவட்டத்தில் காணப்படும் மிக முக்கிய விடயங்களாக உள்ளன.

யுத்தத்தின் பின்னர் நகரப் பகுதிகளில் பாதுகாப்பு நிலைமை உறுதியடைந்துள்ளதுடன், கிராமப்புறங்களில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன், துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆயுத பாதுகாப்பு இன்றி இந்த அச்சுறுத்தலில் இருந்து அவர்கள் விடுபடமுடியாது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**செயற்பாட்டாளர்கள்**

மாவட்ட அரசியல்வாதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், துணை இராணுவக் குழுக்கள் ஆகிய அம்சங்கள் பிரதான செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றன.

**மாற்றங்கள்**

மக்கள் முன்வந்து தமது கவலைகளை வெளிப்படுத்த முடியாதுள்ளனர். மாவட்டத்தில் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை காணப்படுவதே இதற்கு காரணமாகவுள்ளது. பிரதான கட்சிகள் ஆட்சியில் இருந்த போதிலும் தமது துன்பங்களுக்கு ஜனநாயக தீர்வினை எட்டமுடியாத சூழ்நிலையில் மக்கள் உள்ளனர்.

இதேவேளை, போக்குவரத்து அனுமதி முறை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் மனரீதியில் ஊக்கமடைந்துள்ளதுடன், மாவட்டத்துக்குள்ளும், மாவட்டத்துக்கு வெளியேயும் அதிக எண்ணிக்கையிலானோர் பயணஞ் செய்கின்றனர்.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**

துணை இராணுவக் குழுக்களுக்கு எதிரான தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் மாவட்டத்தின் பாதுகாப்புக்கும், அபிவிருத்திக்கும் அச்சுறுத்தலானவர்கள். அனைத்து குழுக்களினதும் ஆயுதங்களை களைவதே இதன் முதற்கட்ட நடவடிக்கையாகும். அரசியல் தலையீடின்றி தீவிரமான நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கும், பாதுகாப்பு படையி-னருக்கும் அரசாங்க ஆதரவு வழங்கப்பட வேண்டும். இந்த சம்பவங்களால் அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ள கிராமங்களுக்கும் தாமதிக்காது மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

## கொழும்பு

**களநிலமைகள்**

பொலிஸாரின் கொடுமையான நடவடிக்கைகள் தொடர்பான அண்மைய அறிக்கைகள் கொழும்பு மாவட்டத்தில் பிரதான இடத்தை பிடித்திருந்தன. சட்டத்தின் அதிகாரிகளான இவர்களின் ஒழுங்கற்ற பழக்கங்களுக்கு எதிராக கோபமடைந்த மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஜனாதிபதி மற்றும் பொலிஸ் உயர்அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து இந்த மக்கள் ஆர்ப்பாட்டம் அமைதிக்கு வந்தது. ஒரு சம்பவத்தில் கொழும்பு குற்றவியல் பிரிவு உயர் அதிகாரியின் மகனின் ஆலோசனையின் பேரில் மாலபே தகவல் தொழில்நுட்ப கல்லூரி மாணவன் ஒருவன் கடத்தப்பட்டு, கொழும்பு குற்றவியல் பொலிஸாரினால் தாக்கப்பட்டுள்ளார். மற்றைய சம்பவத்தில், தவறான நடத்தை என்ற முறைப்பாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்கள் கடுமையாக சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர்.

பாதாளவுலக குழுவினருக்கு எதிராக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நடவடிக்கை உச்சநிலையை அடைந்தது. பல்வேறு குழுக்களைச் சேர்ந்த பாதாளவுலக பிரதான நபர்கள் கொழும்பிலும், கொழும்புக்கும் வெளியிலும் கொலை செய்யப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டனர்.

தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், பெருந்தொகையான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், எல்.ரி.ரி.ஈயுடன் தொடர்புடையவர்கள் என்ற வகையில் பலர் கைதும் செய்யப்பட்டுள்ளனர். கம்பஹா பொலிஸ் நிலையத்தின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரும் அந்த பட்டியலில்

டெங்கு நோய் பரவலும் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. முதல் எட்டு மாதங்களில் பதிவாகியுள்ள உயிரிழப்புக்களே இலங்கை வரலாற்றில் அதிக எண்ணிக்கையாக காணப்படுகின்றது. டெங்கு நோயினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கொழும்பும் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது.

**செயற்பாட்டாளர்கள்**
பொலிஸார், பாதுகாப்பு படையினர், அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகிய அம்சங்கள் பிரதான செயற்பாட்டாளர்களாக காணப்படுகின்றன.

**மாற்றங்கள்**
பொலிஸ் காவலில் இருந்த போது பொதுமக்கள் உயிரிழந்தமை மற்றும் காரணமின்றி கைது செய்யப்பட்டமை போன்ற காரணங்களினால் பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான உறவில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. இதேவேளை, சுகாதார அதிகாரிகள் தொடர்ந்தும் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையில் எவ்விதமான அரசியல் அல்லது உயர் தலையீடுகள் இல்லாதவாறு செயற்படுவதற்கு அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளின் ஆதரவுடனேயே பொலிஸார் தண்டனை பயமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நடைமுறைகள் உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்பதும் அவர்களுடைய கோரிக்கையாக உள்ளது. சட்டத்தில் எவ்வித தவறான ஆதிக்கமும் செலுத்தப்படாதிருப்பதற்கு அரசாங்கம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதாளவுலக குழுத்தலைவர்கள் சுற்றிவளைக்கப்படுவது பெரும்பாலான மக்களால் வரவேற்கப்படுகின்ற போதிலும், அவர்கள் சுட்டுக் கொல்லப்படாது, கைது செய்யப்பட்டு முறையாக விசாரிக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

டெங்குநோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## யாழ்ப்பாணம்

**களநிலைமைகள்**
நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் யாழ்ப்பாண மாவட்டத்தில் பயங்கரவாதம் தொடர்பான எச்சிக்கை தொடர்ந்தும் காணப்படுகின்றது. மாவட்டத்தில் சில கொலைகளுக்கும், பாதுகாப்பு சீர்குலைவு தொடர்பான சம்பவங்களுக்கும் காரணமாகவிருந்த 4 எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யுத்தத்தின் இறுதிகட்டத்தில் இருந்த பதற்ற நிலை தற்போது ஓரளவு தணிந்துள்ளது. மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுக்கின்றனர்.

மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 13 ஆசனங்களையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு 8 ஆசனங்களையும் கைப்பற்றின. 11 வருடங்களின் பின்னர் நடைபெற்ற இந்த தேர்தலில் மொத்தமாக 18% ஆனவர்களே வாக்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் கிழக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தை வடக்கிற்கும் வடக்கின் வசந்தம் என விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் வீதி, மாகாணத்திற்குள் முதலீடுகளை அதிகரித்தல் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

இதேவேளை, சுமார் 2000 குடும்பங்கள் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து யாழ்ப்பாண மாவட்டத்தில் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளன.

**செயற்பாட்டாளர்கள்**
அரசாங்கம், பாதுகாப்பு படையினர் மற்றும் அரசியல்வாதிகள் ஆகிய அம்சங்கள் பிரதான செயற்பாட்டாளர்களாக இருக்கின்றன.

**மாற்றங்கள்**
வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மக்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் என்பன அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

வடக்கிலிருந்து தெற்குக்கு பயணிப்பதற்கான ஏ9 வீதி வர்த்தக பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ள போதிலும், ஏ9வீதியில் பயணிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள போக்குவரத்து தடைகளால் யாழ் வர்த்தகர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இந்த போக்குவரத்து தடைகளால் பொருட்கள் உரிய இடத்தை அடைவதற்கு தாமதமடைவதாகவும், பொருட்கள் பழுதடைவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். தம்புள்ள பொருளாதார நிலையத்தில் நீண்டகாலமாக வர்த்தகத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கே அதிக முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் அவர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். அரசாங்கம் ரயில் நிலையம் மற்றும் ரயில் பாதைகளை புனரமைப்பதில் 2010 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் நிலையில் விரைவில் ரயில் சேவையை அனுபவிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
மாநகர சபைத் தேர்தலுக்கு அடுத்தப்படியாக, சிறந்த ஆட்சிமுறைமை மற்றும் மக்களுக்கும்,அதிகாரிகளுக்கும் இடையில் சிறந்த நல்லுறவை கட்டியெழுப்புவற்கு பொதுமக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பில் கற்பிப்பது குறித்து அரசாங்கம் கவனஞ் செலுத்த வேண்டும்.

வருமானத்தை பெருக்குவதற்கு முன்னிலை வழங்கப்பட்டு தொழில்பயிற்சிகள் போன்றன ஊடாக சுயவேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் புதிய நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், ஏ9 வீதியூடாக பொருட்களை கொண்டு செல்லும் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பிலும் அதிகாரிகள் கவனஞ் செலுத்தி இரண்டு மாகாணங்களுக்கும் இடையிலான சிறந்த வர்த்தக உறவை கட்டியெழுப்புவதற்கு வகை செய்ய வேண்டும்.

## மன்னார்

**களநிலைமைகள்**
மடுமாதா திருத்தல உற்சவத்தில் சுமார் 200,000 பொதுமக்கள் கலந்துகொண்டனர். இதன்போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நான்காயிரம் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மடு பிரதேசத்தில் குடிநீர் வசதி போதியளவு இல்லை. மடு திருத்தலத்திலிருந்து 10கிலோமீற்றர் தொலைவில் புதிய நீரூற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த நீர் குடிப்பதற்கு உகந்ததா என்பது தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

மீன்பிடி தடை அகற்றப்பட்ட பின்னர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் எண்ணிக்கை அன்றாடம் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதேவேளை, இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இலங்கை கடற்படையினருக்கும், இந்திய மீனவர்களுக்கும் இடையிலான மோதலும் அதிகரித்துள்ளது. மீசாலையில் மீள்குடியேற்றம் தொடர்ந்து நடைபெற்ற வருகின்ற நிலையில் மன்னாரின் வாழ்க்கை நிலை சுமூகமாகி வருகின்றது.

**செயற்பாட்டாளர்கள்**
பாதுகாப்பு படையினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய அம்சங்கள் பிரதான செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றன.

**மாற்றங்கள்**
மடுமாத திருத்தல உற்சவம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தமை நாட்டின் கத்தோலிக்கர்களிடையே மகிழ்ச்சியையும் அமைதியையும் தோற்றுவித்துள்ளது.

மீன்பிடிக்கான தடை அகற்றப்பட்டுள்ள போதிலும், மீன்பிடி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான வசதிகள் இன்மையால் பல மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடாத நிலை காணப்படுகின்றது. இதனால் மீனவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இலங்கை கடற்படையினருக்கும், இந்திய மீனவர்களுக்கும் இடையிலான மோதல்களினாலும் இவர்களது மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
பெரும்போகத்திற்கு முன்னர் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டால், விவசாயிகள் தமது நிலங்களில் பயிரிட்டு வருமானத்தை பெருக்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

தென் மாகாணத்திற்கு நேரடியான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு போக்குவரத்து தடைகள் நீக்கப்பட்டால்,மழைக்காலங்களில் பஸ்களுக்காக அலைந்துதிரியாது செல்ல வேண்டிய இடத்தை அடைவதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைக்கும்.

இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பல மாதங்களாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் தாமதிக்காது அவர்கள் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

## திருகோணமலை

**களநிலமைகள்**
யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் கிழக்கு மாகாண மாணவர்கள் தமது கல்வியை தொடர்வதில் ஆர்வமாக உள்ளனர். விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களை கற்பிப்பதற்கு ஒய்வுபெற்ற ஆசிரியர்களை மீள அழைப்பதன் ஊடாக ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இடம்பெயர்ந்தவர்களை மீள குடியேற்றும் நடவடிக்கை தொடர்ந்து வருகின்றது. மீள்குடியேற்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்கள் விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விசாரணைகள் நிறைவுபெற்ற குடும்பங்கள் உடனடியாக தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுகின்றன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திருகோணமலையில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துள்ளனர். உலகில் உள்ள பிரபலமான இயற்கைத் துறைமுகமாக திருகோணமலை இருப்பதனால் கடற்றொழில் சார்ந்த முதலீட்டாளர்களே அதிக ஆர்வத்துடன் உள்ளனர்.

வங்கிகள், கணனி கற்கை நிறுவனங்கள், உணவகங்கள் என்பன திருகோணமலையில் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இவை மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்திக்கு உதவி புரியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சரும் திருகோணமலைக்குச் சென்று அகில இலங்கை திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை எதிர்பார்த்துள்ளவர்களை சந்தித்தனர்.

இதேவேளை, அனைத்து கல்வி வலயங்களிலும் உயர்தர பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, இடம்பெயர்ந்தவர்களுக்காக திருகோணமலை மாவட்டத்தில் சில பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**செயற்பாட்டாளர்கள்**
கல்வி அதிகாரிகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள், மற்றும் இடம்பெயர்ந்தோர் ஆகிய அம்சங்கள் பிரதான செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றன.

**மாற்றங்கள்**
வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. விடுதிகளில் வருமானங்கள் அதிகரித்துள்ளதோடு, புதிய தொழிலாளர்களை இணைத்துக் கொள்ள வேண்டிய தேவையும் உருவாகியுள்ளது. எவ்வாறாயினும், விடுதிகளுக்கான வீதி மற்றும் மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. தற்போது காணப்படும் வசதிகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை திருப்திப்படுத்துவதற்கு போதாமையே இதற்கு காரணமாகும்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இடம்பெயர்ந்தவர்கள் என்ற போர்வையில் எஞ்சியிருக்கும் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் ஊடுருவலாம் என்ற எச்சரிக்கையின் காரணமாக பாதுகாப்பு படையினர் அவதானமாக உள்ளனர்.

.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
சுற்றுலா, கட்டட நிர்மாணம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் மொழி தொடர்பான அபிவிருத்தியும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். அனைத்து வசதிகளும் உடைய வேறு மாவட்ட இளைஞர்களுக்கு இணையான தகுதியை இம்மாவட்ட இளைஞர்களும் பெறுவதற்கு இந்த வசதிகள் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், இடம்பெயர்ந்தவர்களுக்கு வருமானம் ஈட்டும் வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முதன்மையிடம் வழங்கப்பட வேண்டும்.

## வவுனியா

**களநிலமைகள்**
மாவட்டத்தில் பொதுவான அமைதிநிலை தொடர்கின்றது. குற்றங்களின் எண்ணிக்கை குறைந்த அளவிலேயே பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய மழைக் காலநிலையில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான நிலைமைகள் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. தற்போது வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 20 இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் 84,000குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 250,000பேர் உள்ளனர். இம்மாத ஆரம்பத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சில குடும்பங்கள் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டனர். 16 கிராமங்களில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், இப்பகுதிகளில் வீதிகள் புனரமைக்கப்பட்டு, நீர் மற்றும் மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்படும் என வவுனியா அரச அதிபர் அறிவித்துள்ளார். அண்மையில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலமையினால் முகாம்களில் நிலைமை மோசமடைந்துள்ளது. இதன் காரணமாக சுமார் 1,000 குடும்பங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. முகாம் பகுதிகளில் நிலம் முழுவதும் சேறாக காணப்படுவதினால், மக்கள் நடமாட முடியாதுள்ளதுடன், வாகனங்களும் சேற்றில் சிக்கிக் கொள்கின்றன. முகாம்களுக்கு குடிநீர் கொண்டு செல்லும் வாகனங்களும் பயணிக்க முடியாதுள்ளது. தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த பல சமையலறைகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், சமையலுக்குத் தேவையான உலர்விறகுகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் இடம்பெயர்ந்தவர்களுக்கு சமைத்த உணவுகளை விநியோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதேவேளை, ஐ.நா நிறுவனங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக மலசலகூடங்கள் கடும்மழையினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்கனவே மலசலகூடங்களுக்கு பற்றாக்குறை நிலவிவந்த நிலையில், தற்போது நிலை மேலும் மோசமடைந்துள்ளது. அதுமாத்திரமின்றி மனித கழிவுகள் மற்றும் குப்பைகளால் முகாம்களில் வசிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை உடனடியாக மீளக்குடியேற்றுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை அரசாங்கத்திடம் கோரியுள்ளது. இதேவேளை, ஏற்கனவே மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளவர்களின் 6 மாத உணவுத் தேவைக்காக உலக உணவுத் திட்டத்திற்கு 1.7பில்லியன் ரூபாயை வழங்குவதற்கு USAID இணக்கம் தெரிவித்துள்ளது. மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதன் ஒரு கட்டமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவைகள் முகாம்களுக்குள் முன்னெடுக்கப்படுகின்றன.

உயர்தரப் பரீட்சையில் தோற்றி 1,887 இடம்பெயர்ந்த மாணவர்களின், 166 மாணவர்கள் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களாக இருந்தவர்களாவர்.

முறையான வடிகால் வசதிகள் இன்மையால் முகாம்களில் மூளை சம்பந்தமான நோய்கள் பரவியமை காரணமாக கடந்த மூன்று மாதங்களில் 34 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்கள் பலரும் போஷாக்கற்று இருப்பதாகவும், அவர்களுக்கு சிகிச்சை தேவைப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மடுதிருத்தல உற்சவத்தில் 200,000 பேர் வரையில் கலந்து கொண்டமை மாவட்டத்தில் அமைதி குறித்த திருப்தியை தோற்றுவித்துள்ளது.

**செயற்பாட்டாளர்கள்**
அரசாங்க அதிகாரிகள், சுகாதார பிரிவு, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் ஆகிய அம்சங்கள் பிரதான செயற்பாட்டாளர்களாக காணப்படுகின்றன

**மாற்றங்கள்**
இடம்பெயர்ந்தவர்களில் சில ஆயிரக்கணக்கானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் திருப்திகரமான எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. முகாம்களின் நிலைமை மோசமடைந்துள்ளமை பதற்றத்தை தோற்றுவித்துள்ளமையால், இது குறித்து உடனடி கவனஞ் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. முகாம்கள் வாழ்வதற்கு உகந்ததல்லாததாக மாறிவருவதுடன், முறையற்ற வடிகால் அமைப்பும் நோய் தொற்றுக்களுக்கு காரணமாக உள்ளது.

நடமாடும் ஆவண சேவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன், அடையாள பத்திரங்களான பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றமை மக்கள் மத்தியில் அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
இடம்பெயர்ந்தவர்களில் சில ஆயிரக்கணக்கானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் திருப்திகரமான எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. முகாம்களின் நிலைமை மோசமடைந்துள்ளமை பதற்றத்தை தோற்றுவித்துள்ளமையால், இது குறித்து உடனடி கவனஞ் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. முகாம்கள் வாழ்வதற்கு உகந்ததல்லாததாக மாறிவருவதுடன், முறையற்ற வடிகால் அமைப்பும் நோய் தொற்றுக்களுக்கு காரணமாக உள்ளது.

நடமாடும் ஆவண சேவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன், அடையாள பத்திரங்களான பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றமை மக்கள் மத்தியில் அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

சூழ்நிலையின் துரித மதிப்பிடல் (RCA) உள்ளூர் சூழ்நிலைகளின் மாற்றங்களை நன்கு புரிந்து கொள்வதன் அடிப்படையில் பல்வேறுபட்ட மனிதநேய மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்து கவனம் செலுத்தும் அதிக பயனுறுதி கொண்ட இடையீடுகளைத் திட்டமிட்டு, அமுல்படுத்துவதற்கான பயனுள்ள தகவல்களை மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதே வேளை, சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் இடையீடுகள் மாவட்டங்களின் சமாதானம் மற்றும் மோதல்நிலை மாற்றங்களுக்கு கூருணர்வுத்தன்மை கொண்டவை என்பதையும் முகவர்கள் மோதல்களை சிறிதளவேனும் உருவாக்கவோ அல்லது மோசமாக்குவதையோ தவிர்த்து மோதல் தணிப்பு/மோதல் உருமாற்றம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கூடுதல் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

சூழ்நிலைகளின் அபாயவாய்ப்புக்களை மதிப்பிடல் முகவர்களின் செயற்பாடுகளை சற்று இடைநிறுத்தி ஊழியர்கள் மற்றும் திட்டம் அமுல்படுத்தும் இடங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

வெளியேயுள்ள மட்டத்தில் (பொது மக்கள், சர்வதேச சமுகம்) ஆலோசனைத் தேவைகளுக்காக இலங்கையின் மாவட்டங்களின் நிலைமைகள் பற்றிய விரிவானதும், நடுநிலையானதுமான தகவல்களை சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் வழங்கும்.

எங்களது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்

http://www.humanitarian-srilanka.org/Knowledge_Centre/Publications.php

இந்த அறிக்கை மீதான உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறோம், அவற்றை பின்வரும் மின்னஞ்சல்.்.தபால் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும்: **feedback@cha.lk**

மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு
30.்.81, லோங்டன் பிளேஸ்,
கொழும்பு 7, இலங்கை.
தொலைபேசி.்.தொலைநகல் : 94-112506855/2598413